மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை 20.08.2023 அதிர்வு 20

## திருமலையில் துப்பாக்கியுடன் விமானப் படைச் சிப்பாய் மாயம்

திருகோணமலை – மொரவெவ விமானப் படை முகாமின் பயிற்சி நிலை சிப்பாய் ஒருவர் ரி – 56 ரகத் துப்பாக்கி ஒன்றுடன் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

04






# நல்லூர்க் கொடியேற்றம் நாளை
## கொடிச்சீலை எடுத்து வரப்பட்டது

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று மிகவும் பக்தி பூர்வாமாக இடம்பெற்றது.

04

# சாத்தியம் இல்லாதவற்றை கேட்டு வற்புறுத்தாதீர்கள்!
## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு
## தமிழ் அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள்



கொழும்பு,ஓகஸ்ட்20

“தமிழ் அரசியல்வாதிகள் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தீர்வை வென்றெடுக்க முயல வேண்டும். அதை விடுத்து நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயங்களைக் கோருவதில் எந்தப் பயனும் இல்லை.”

- இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

04



## தோட்ட நிர்வாகம் அராஜகம்!
### தற்காலிக குடியிருப்பை உடைத்தெறிந்த உதவி முகாமையாளர்

மாத்தளை, எல்கடுவ பிளான்டேசனுக்கு உட்பட்ட ரத்வத்த கீழ்பிரிவில் லயன் குடியிருப்பில் இருந்த மக்களின் தற்காலிக வீடுகளை அந்தத்

04

## அந்தக் காடையனை வெளியேற்றுங்கள்!
### மனோ கடும் சீற்றம்

மாத்தளை, எல்கடுவ பிளான்டேசனுக்கு உட்பட்ட ரத்வத்த கீழ்பிரிவு தோட்டத்தில் அடாவடியில் ஈடுபட்ட

04

### இளைஞர்களைக் குறிவைத்து
## 3 இடங்களில் துப்பாக்கிச்சூடு ஒருவர் சாவு; இருவர் படுகாயம்

நாட்டில் மூன்று இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இளைஞர் ஒருவர் சாவடைந்துள்ளார். மேலும் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மொனராகலை – வெல்லவாய பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞரின் வீட்டுக்கு ஓட்டோவில் சென்ற இனந்தெரியாத மூவர், துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞர் சம்பவ

04

## நெல்லியடியில் கோர விபத்து
## 2 இளைஞர்கள் பரிதாபச் சாவு!




வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் பாலத்துக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் இரண்டு இளைஞர்கள் சாவடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 1.30 மணியளவில் யாழ். வடமராட்சி, நெல்லியடி – கொடிகாமம் வீதியில் கலிகைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

04

# சீனக் கப்பலுக்கு அனுமதியா? இன்னும் முடிவேதுமில்லையாம்!



சீன கப்பலிற்கு அனுமதி வழங்குமாறு சீன தூதரகம் விடுத்துள்ள வேண்டு கோளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்து இலங்கை அரசாங்கம் இன்னமும் தீர்மானம் எதனையும் எடுக்க வில்லை என வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் இராஜதந்திர பிரிவின் இயக்குநர் பிரியங்க விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியா – சீனா பதற்றம் மீண்டும் தலைதூக்கியுள்ளதுடன் இந்து சமுத் திரத்தில் இலங்கையின் நடுநிலை தன்மையை சோதிப்பதாகவும், சீனாவின் "சின் யான் – 6" ஆராய்ச்சிக் கப்பலிற்கு அனுமதியளிப்பதா என்ற விடயம் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தலைவலியை ஏற்படுத்துவதாகவும் மாறியுள்ளது.

இன்னும் உறுதிசெய்யப்படாத திகதி யில் சீன கப்பலிற்கு அனுமதி வழங்கு மாறு சீன தூதரகம் விடுத்துள்ள வேண்டு கோளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்து இலங்கை அரசாங்கம் இன்னமும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் இராஜதந் திர பிரிவின் இயக்குநர் பிரியங்க விக் கிரமசிங்க "சண்டே டைம்ஸ்" பத்திரி கைக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த வேண்டுகோள் தொடர்பில் வழமையான இராஜதந்திர நடைமுறை களை அமைச்சு பின்பற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீன கப்பல் ஒக்டோபர் 25 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது நவம்பர் 11ஆம் திகதி வரை கப்பல் இலங் கையில் தரித்து நிற்கும் என இலங்கை கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது அனுமதி வழங்கப் படுகின்றதா என்பதை பொறுத்தவிடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் அதிகரித்துள்ள பதற்றங்கள் காரணமாக முன்னர் வழமையான துறைமுக விஜயங்களாக காணப்பட்டவை தற்போது சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அரசாங் கம் நெருக்கடியான நிலையில் உள்ளது என முன்னாள் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீன கப்பலின் வேவுபார்க் கும் திறன் குறித்த இந்தியாவின் கரிசனைகளை நிராகரிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

4000 தொன் ஆழகடல் ஆராய்ச்சிக் கப்பல் புவிஇயற்பியல் ஆய்வு மேற்கொள் ளக் கூடியது. மேலும் கடலியல், கடல் சூழ லியல் , புவியியல் ஆகியவற்றை படிப்ப துடன் நிலம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கான மாதிரிகளை யும் அது சேகரிக்ககூடியது எனக் கூறப்பட்டது.

# மொபைல் பேசியபடி தண்டவாளத்தில் நடந்தவர் சாவு!

கையடக்கத் தொலைபேசியில் உரையாடியவாறு ரயில் பாதை யில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவர் ரயிலால் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

கொட்டகலைக்கும் ஹட்டனுக் கும் இடையிலான பாலத்துக்கு அருகில் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே இந்தப் பெண்ணை மோதி யுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கொட்டகலை ரயில் நிலை யத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு கொட்டகலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உயிரிழந்தவர் ஹட்டன், குடா கம பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தகவல்கள் வெளிவந்துள் ளன.

# கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு







கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் பகுதியில் கிணறு சுத்தம் செய்யும் வேளையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இராணுவத்தின ருக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

இதன்போது பழைய பி.கே.எல்.எம். ஜி, ஏ.கே. ரவுன்ஸ்கள், 60 எம் செல் 5, டிக்னெட்கள் சாஜஸ்கள் என்பவற்றுடன் பழைய இலத்திரனியல் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



# அம்பாறை ஊடகவியலாளர் போரத்தின் வருடாந்த மாநாடும் கௌரவிப்பும் இன்று

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் 6 ஆவது வருடாந்த மாநாடும் ஊடகவியலாளர் கௌரவிப்பும் தலைவர் கலாபூசணம் எம்.ஏ.பகுர்தீன் தலைமையில் அக்கரைப்பற்று எயிம்ஸ் சர்வதேச பாடசாலை கேட்போர் கூடத்தில் இன்று (20) இடம்பெற்றன.

இதன் போது புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் 24 படைப்பிரிவின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி, தினகரன் பத்திரிகையின் முன்னாள்பிரதமஆசிரியர் கே.குணராசா, தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

போரத்தின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் ஊடகத்துறைக்கு வழங்கிய பங்களிப்புக்காக அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப் பட்டனர்.









# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சாத்தியம்...

அவர் மேலும் கூறுகையில் –

“13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் காணப்படுகின்றது. ஆகவே, அது பற்றிய விடயங்களை முன்னெடுக்கும் போது எதிர்ப்புக்களை வெளியிடுவது பொருத்தமல்ல.

அத்துடன், அந்தத் திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற நிர்வாகச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையிலான திருத்தங்கள் நாடாளுமன்றத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன.

அவ்வாறான நிலையில் வடக்கு அரசியல்வாதிகள் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயங்களைக் கோருவதில் எந்தப் பயனும் இல்லை.

மேலும் அவர்கள் தொடர்ச்சியாக விடுக்கும் கோரிக்கையானது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழிசமைக்காது. மாறாக, அவை தொடர்ச்சியாக நீடித்துச் செல்லவே வழிசமைப்பதாக இருக்கும்.

அதேபோன்று தென்னிலங்கையில் வாக்கு வங்கிகளுக்காகக் கடும்போக்காளர்களாக தம்மைக் காண்பித்து, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைக் குழப்பிவிடக்கூடாது.

வடக்கு மக்களுக்கும், தெற்கு மக்களுக்கும் தற்போது வரையில் முழுமையான இரு தரப்பு நம்பிக்கை ஏற்படுத்தப்படாமல் துருவப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலைமையையே முதலில் மாற்ற வேண்டும். அதற்காக ஜனாதிபதி முதற்கட்டமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

அதன் அடிப்படையில், இரு இன மக்களுக்கும் இடையில் புரிதலும் நம்பிக்கையும் ஏற்பட்டு நல்லிணக்கம் உருவாகின்ற தருணத்தில் மேலதிகமான விடயங்களைப் பேச்சுகள் ஊடாகத் தீர்த்துக்கொள்ள முடியும்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல், அரசியல் தரப்பில் உள்ளவர்கள் தமது நலன்களுக்காக அதி உச்சமான விடயங்களை விவாதித்துக்கொண்டிருப்பதானது சந்தர்ப்பத்தையும் காலத்தையும் வீணடிப்பதாகவே இருக்கும்.” – என்றார்.

### நல்லூர்க் கொடியேற்றம்...

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன் படி கல்வியங்காட்டில் அமைந்துள்ள கொடிசீலை வழங்கும் செங்குந்தர் பரம்பரையை சேர்ந்தவரின் இல்லத்தில் கொடிச்சீலைக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று மங்கள வாத்தியம் சகிதம் கல்வியங்காடு வேல் மடம் முருகன் ஆலயத்திற்கு கொடிச்சீலை எடுத்துச் செல்லப்பட்டது.

அதனைத் தொடந்து வேல் மடம் முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தில் பருத்தித்துறை வீதி ஊடக எடுத்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாளை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ளது.

### 3 இடங்களில்...

இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர், போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளையில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தெஹிவளை ஓபன் பிளேஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இனந்தெரியாத இருவர் இந்தத்துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

தனது வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் நின்றிருந்தபோது, குறித்த நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 30 வயதுடைய இளைஞர், களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பேராதனை – முரதலாவ பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கண்டி – வட்டுவளை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

நீதிமன்றத்தில் பிடியாணை பெற்ற சந்தேகநபரான குறித்த இளைஞரைக் கைது செய்யச் சென்றபோது, இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக கொள்ளை மற்றும் நீதிமன்றத்தைப் புறக்கணித்தமை தொடர்பில் இரண்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், நேற்று குறித்த சந்தேக நபரை கைதுசெய்வதற்காகச் சென்ற வேளையில் அவர் பொலிஸாரைத் தாக்குவதற்கு முயற்சி செய்துள்ளார்.

அதன்போது, பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த சந்தேகநபர் கண்டி தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### தோட்ட நிர்வாகம்...

தோட்டத்தின் உதவி முகாமையாளர் அடித்து உடைக்கும் வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றது.

இது குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு:–

இந்துக் குடியிருப்பில் இருந்த மூன்று குடும்பங்கள் உள்ளடங்களாக 14 பேர் ஒரே லயன் அறையில் தொடர்ந்து வாழ்ந்து வந்த நிலையில், தமக்கு வீடொன்றையோ, வீடமைக்கக் காணித்துண்டொன்றையோ வழங்குமாறு பல வருடங்களாக பல தோட்ட முகாமையாளர்களிடம் இக்குடும்பத்தினர் கேட்டு வந்துள்ளனர்.

அவ்வகையில் தற்போதுள்ள முகாமையாளருக்கு முன்பிருந்தவர், ஒரு இடத்தைக் காட்டி இங்கு வீடமைத்துக்கொள்ளுங்கள் என அனுமதி வழங்கிய நிலையில், குறித்த குடும்பத்தினர் வாழை மரம் உள்ளிட்ட சில பயிர்களையும் அவ்விடத்தில் நாட்டியமையுடன், ஒரு கிழமைக்கு முன் அவ்விடத்தில் தற்காலிக குடியிருப்பொன்றையும் அமைத்துள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு நேற்று தனது அதிகாரிகள் சகிதம் சென்ற உதவி முகாமையாளர், அந்தக் குடியிருப்பை உடைத்து பொருள்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

உதவி முகாமையாளர் உட்பட இரு அதிகாரிகள் இணைந்து வீட்டை உடைத்துப் பொருள்களைச் சேதம் செய்யும் காணொளி சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டுள்ளது.

மேலும் அந்த உதவி முகாமையாளரின் அடாவடித்தனம் குறித்து உரிய அதிகாரிகளுக்குப் பாதிக்கப்பட்ட மக்கள் அறிவித்துள்ளனர்.

### அந்தக் காடையனை...

தோட்ட உதவி முகாமையாளரை உடன் விலக்குமாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் அவர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பான மனோவின் முகநூல் பதிவு வருமாறு:–

“எமது பொறுமையை இனியும் சோதிக்க வேண்டாம். முதலில் அந்தக் காடையனை தோட்ட நிர்வாகத்தை விட்டு விலக்குங்கள்” – என்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரணவை அழைத்து கத்தினேன்.” – என்றுள்ளது.

### திருமலையில்...

மொரவெவ காட்டுப் பகுதியில் ஆரம்பப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று மாலை அவர் காணாமல் போயுள்ளார் என்று முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

காலி – வக்வெல்ல பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய விமானப் படைச் சிப்பாயே இவ்வாறு காணாமல்போயுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### நெல்லியடியில்...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றும் செல்வநாயகம் வின்சன் மனோஜ்குமார் (வயது 31), கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த விஜயகாந்த் நிசாந்தன் (வயது 29) ஆகிய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நல்லைக் கந்தனுக்கு நாளை கொடியேற்றம்!



நல்லூர் கந்தசுவாமி கோயில் இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற இந்துக் கோயில்களில் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. நல்லூர் 12 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது. யாழ்ப்பாண அரசு காலத்தில்மிகவும்முக்கியமானஒருகோயிலாக இருந்ததாக அறியப்படுகிறது.

இந்த அலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் சிலாவிக்கிருகத்துக்குப் பதிலாக வேல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி பிள்ளையார் முதலான பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயம் கிழக்கிலும், தெற்கிலும் வடக்கிலும் வாசல்களைக் கொண்டுள்ளது. இவற்றின் மேல் பெருங் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் தெற்குப் புறத்தில் உள்ள தீர்த்தக்கேணி நன்கு திட்டமிடப்பட்டு, படிக்கட்டுகளும் மண்டபங்களும் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுதபாணிக்கு அங்கு சிறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன.

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன.

தினமும் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி பூஜை இடம்பெறுகின்றமையும், மாலையில் பள்ளியறைப் பூஜை இடம்பெறுகின்றமையும் இந்த ஆலயத்தின் சிறப்புகளில் ஒன்றாகும். திருவிழா காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் மாலையில் முருகப் பெருமானை ஊஞ்சல் பாட்டுப்பாடி, அழகிய சிறு மஞ்சத்தில் ஏற்றி பள்ளியறையில் துயில்கொள்ளச் செய்வதும், மறு நாள் அதிகாலையில் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி பாடி, முருகனைத் துயிலெழுப்பி அதே சிறு மஞ்சத்தில் அழைத்து வந்து மூலஸ்தானத்தில் அமர்த்துவதும் சிறப்பான மரபாகும்.

இங்கு, ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாள்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆடி அமாவாசையின்ஆறாம்நாள்கொடியேற்றத்திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகிறது.

மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இந்தக் காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காக நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இக்கோயில் கட்டுவிக்கப்பட்டதெனயாழ்ப்பாணவைபவமாலை கூறுகிறது. இதற்கு ஆதாரமான பின்வரும் தனிப்பாடல், 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

"இலக்கிய சகாத்தமெண்ணூற்
றெழுபதாமாண்டதெல்லை

யலர்பொலி மாலை மார்பனாம்
புவனேகபாகு

நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரி–
கட்டுவித்து நல்லைக்

குலவிய கந்தவேட்குக் கோயிலும்
புரிவித்தானே"

ஆனால் இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டை அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் ஸ்ரீ சங்க போதி எனும் பட்டத்தைக்கொண்ட புவனேகபாகு எனப் பெயர் கொண்டு கோட்டை அரசரான, செண்பகப் பெருமாள் என்பவரால் கட்டப்பட்டதாகும். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள். சமஸ்கிருதத்தில் உள்ள இக்கட்டியத்தின் பகுதி பின்வருமாறு உள்ளது.

"சிறீமான் மஹா ராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி சிறீ கஜவல்லி மஹா வல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோடச மஹாதான சிவ கோத்திரோற்பவ இரகுநாதமாப்பாணர் சமுக"

திருவருள் பொருந்திய தெய்வயானையுடனும், வள்ளியம்மனுடனும் சேர்ந்திருக்கின்ற சுப்பிரமணியரின் திருவடிகளை வணங்குபவனும், மன்னர்களுக்கு மன்னனும், மிகுந்த செல்வங்களுடையவனும், இப் பரந்த பூமண்டலத்தில் எல்லாத்திசைகளிலும் புகழப்படுபவனும், மக்கள் தலைவனும், பதினாறு பெருந்தானங்களைச் செய்பவனும் சூரிய குலத்தில் உதித்தவனுமாகிய ஸ்ரீ சங்க போதி புவனேகவாகு... என்பது இதன் பொருள்.

முன்னரே சிறியதாக இருந்த கோயிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகவாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக் கூடும் என்பதே பொருத்தம் என்பது வேறுசிலர் கருத்து.

உண்மையில் நல்லூர் இப்போது உள்ள அமைப்பானது முன்றாவது கோயில் கட்டுமானம் ஆகும். இந்த 3 ஆவது கோயிலின் அமைப்பில் அது வரை இருந்த பழைய ஆலயத்தின் எந்த கட்டுமானங்களும் சமந்தப்படாத புதிய கட்டுமானம்தான் இப்போதுள்ள நல்லூர் கந்தன் ஆலயம் அகும்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலால் முடியாது

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனதார விரும்பினால் அரசியல் தீர்வு காண முடியும்.”

- இப்படி தமிழர் தரப்பில் மிக மூத்த - சிரேஷ்ட - சுமார் அறுபது ஆண்டு கால அரசியல் அனுபவம் மிக்க - இரா(ஜ குரு)சம்பந்தன் எம்.பி. கூறியிருக்கின்றமை வியப்பானது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - நீதி,நியாயமான - தீர்வைக் காண வேண்டும் என்ற நேர்மையான சிந்தனைபோக்கு, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் எந்தத் தலைமைக்கும், எப்போதும் இருந்ததில்லை என்பது ஒரு விடயம்.

அதிலிருந்து மாறுபாடானவராக ரணில் விக்கிரமசிங்க நியாயமான தீர்வுக்கு மனதார விரும்புவார் என்று எண்ணுவதிலும் அர்த்தமில்லை.

அடுத்ததாக, இன்றைய நிலையில், தென்னிலங்கை அரசியல் இங்கு மகாவம்ச மனவமைப்பு என்ற கற்பனவாத குரோத சாகரத்தில் மூழ்கி, பௌத்த - சிங்கள பேரினவாத மேலாண்மை வெறியில் திளைத்து நிற்கையில், அதன் தலைவர் ஒருவர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற பதவியில் இருப்பதால் மட்டும் நீதி, நியாயமான தீர்வைத் தந்து விட முடியாது. அது சாத்தியமற்றது என்பதே உண்மை.

அதுவும் மக்களின் வாக்குகளைப் பெறாமல் பின் கதவால் ஜனாதிபதி பதவிக்கு வந்தவர் -

நாடாளுமன்றத்தில் ஓரிரு எம்.பிக்களைத் தவிர்ந்து, தமது அரசைக் கொண்டு நடத்தும் ஆதரவுக்குப் பிற கட்சிகளின் தயவையே நம்பி இருக்கும் ஒருவர் -

தன்னுடைய அடுத்த ஜனாதிபதி தேர்தல் வெற்றி என்ற ஒரே சுயநல அரசியலை மட்டுமே இலக்கு வைத்து நாட்டின் தேசிய அரசியல் விடயங்களைக் கையாண்டு, அரசியல் சதுரங்கத்தில் காய் நகர்த்துகின்ற ஒருவர் -

அவர், மனதார விரும்பினாலும் கூட, அவரால் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றைத் தந்து விடவே முடியாது.

இதுதான் யதார்த்தப் புறநிலை உண்மையாகும்.

பல சமயங்களில் நீதி. நியாயமான தீர்வு காண எத்தனிப்பவர் போல செயல்படுவதற்கு ரணில் முன் வந்திருக்கிறார் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. மறந்து விட முடியாது.

*2002 - 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக இருந்த புலிகளுடன் ஆறு சுற்று பேச்சுக்களை அவரது அப்போதைய அரசு நடத்தியது.*

*2015 - 2019 காலப்பகுதியில் அவரது நல்லாட்சி அரசுடன் தமிழர் தரப்பு சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட வழிகாட்டல் கூட்டங்களில் பங்கு பற்றி, நாடாளுமன்றத்தையே ஓர் அரசமைப்பு சபையாக மாற்றும் முயற்சியில் கலந்து கொண்டு, ஒரு நகல் யாப்பு உருவாக்கும் வரை நம்பிக்கையுடன் முன்னேறியது.*

கடைசியில் என்ன நடந்தது? தென்னிலங்கையின் இறுக்கமான மகாவம்சக் கட்டமைப்பில் - பேரினவாத மேலாண்மை வெறிச் சிந்தனையில் - பௌத்த, சிங்கள கடும்போக்கு நிலைப்பாட்டில் - அவை யெல்லாம் பயனற்றுப் போயின.

இப்போதும் கூட, ரணில் விரும்பினால் 13ஆம் திருத்தத்தில் நடைமுறையாக்கம் செய்யப்படாத அதிகாரங்களை, அடுத்த ஓராண்டுக்கு தமக்குள்ள நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி மூலம் நடைமுறைப்படுத்த அவர் எத்தனிக்கலாம். அதுதான் அவரால் செய்யப்படக்கூடிய உச்சமான நியாயப் பாடாக இருக்க முடியும். அதற்கு மேல் அவரால் முடியாது. அதையும் கூட, அவர் செய்ய விரும்பவில்லை என்பதே உண்மை.

# மாணவரிடையே பாலியல் கல்வி வழங்கும் திட்டத்துக்குத் தீர்மானம்

(அ.அஸ்வர்)

பாலர் வகுப்பு முதல் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு பாலியல் கல்வி வழங்கும் திட்டத்தை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்க சிறுவர்களுக்கான நாடாளுமன்ற மன்றம் தீர்மானித்துள்ளது.

முன்பள்ளிக் குழந்தைகள் மற்றும் பிற தர மாணவர்களுக்குபாலியல்அறிவை வழங்குவதற்காக 14 புத்தகங்கள் தற்போது தேசிய கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மருத்துவர்கள், குழந்தைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, சுகாதார அமைச்சக அதிகாரிகள் ஆதரவளிக்கின்றனர்.

ஒவ்வொரு தரம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட புத்தகங்களின் உள்ளடக்கங்கள் வேறுபட்டவையாக இருப்பதுடன் இந்த புத்தகங்கள் துணை வாசிப்பு புத்தகங்களாக வழங்கப்படுகின்றன.

அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே நேரத்தில் புத்தகங்களை வழங்குவது தற்போதைக்கு சிரமம் என்பதால், மாணவர்கள் முதலில் இந்த புத்தகத்தை இணைய வழி மூலமாக வாசிக்க வாய்ப்பளிக்கப்படும் என்று மன்றத்தின் தலைவி ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# கல்முனை ஸாஹிரா மாணவர் கௌரவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி தரம் 10 இன் முதலாம் தவணைப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும், இணைப்பாட விதான செயற்பாடுகளில் கல்முனை வலய மட்டம் மற்றும் கிழக்கு மாகாண மட்டம் ஆகியவற்றில் வெற்றியீட்டி திறமையை வெளிப்படுத்தி சாதனை படைத்த மாணவர்களையும் பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், வகுப்பாசிரியர்கள் , சிரேஷ்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் கல்லூரிக்குத் தொடர்ச்சியாக வருகை தந்த 3 மாணவர்கள் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்.

# கசிப்பு , கஞ்சாவுடன் இருவர் ஆனைக்கோட்டையில் சிக்கினர்!

கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று (20) முற்பகல் ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# அக்கரைப்பற்று நீதிமன்றத்தின் உத்தியோகத்தர் அணி சம்பியன்

(பெளசுல் றிபாஸ்)

அக்கரைப்பற்று நீதிமன்ற சட்டத்தரணிகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கும், சட்டத்தரணிகளுக்குமிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் சிநேகபூர்வமாக இந்தச் சுற்றுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி மாவட்ட, நீதிவான் நீதிமன்றங்களின் நீதிபதி எம்.எச்.எம். ஹம்சாவின் வழிகாட்டலில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம்.எம்.பகீஜ் தலைமையில் பள்ளிக்குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் சட்டத்தரணிகள் அணி, நீதிவான் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி ஆகிய மூன்று அணிகள் பங்குபற்றியிருந்தன.

இந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி போட்டியில் மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணியும், சட்டத்தரணிகள் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி 153 ஓட்டங்களைப்பெற்றது. 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி எதிர்த்தாடிய சட்டத்தரணிகள் அணி 107 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டது. 46 ஓட்டங்கலால் மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.றொக்கஷ் , கௌரவ அதிதிகளாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா, சம்மாந்துரை மாவட்ட நீதிபதி ரீ.கருணாகரன், கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம். றியாழ், நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகளான எம்.எம்.அப்பாஸ், எஸ்.எம்.ஏ.கபூர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நாட்டில் 29 ஆயிரத்து 34 வீடுகளின் நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டன

## வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தகவல்



மூன்று வருடங்களில் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்ட 37 ஆயிரத்து 179 வீடுகளில் 29ஆயிரத்து 34 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் 8 ஆயிரத்து 145 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டி உள்ளன என்று அந்த அதிகாரசபை கூறுகிறது. இந்த வீட்டுத் திட்டங்கள் கடந்த 2020 முதல் 2023 வரையிலான மூன்று ஆண்டுகளுக்குள் திட்டமிடப்பட்டவை.

உங்களுக்கு வீடு - நாட்டுக்கு எதிர்காலம், மிஹிந்து நிவஹன, விரு சுமித் துரு செவன, சேவாபிமானி உள்ளிட்ட 15 வீடமைப்பு உதவித் திட்டங்களின் கீழ் இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவு 18717.771 மில்லியன் ஆகும். இதுவரை 16409.667 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடமைப்புத் திட்டத்துக்கான நிதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் விசேட திட்டங்களுக்கு திறைசேரி நிதிகள், செவன நிதிகள், உள்ளக உற்பத்தி மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் வீடமைப்பு திட்டத்துக்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள வீடுகளை விரைவாக பூர்த்தி செய்யுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நகர அபிவிருத்திமற்றும்வீடமைப்புஅமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதுவரை புதிய வீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

எஞ்சிய 8 ஆயிரத்து 45 வீடுகளைக் கட்டி முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட போராட்டம் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்த வீட்டுத் திட்டங்களில் பலவற்றின் கட்டுமானப் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியவில்லை.

ஆனால்,தற்போதுநாடுமீண்டு,பொருளாதாரம் ஸ்திரமாக உள்ளது. எனவே திறைசேரிக்குச் சுமை ஏற்படுத்தாமல் வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# 95 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்




வவுனியா தவசிக்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் மாம்பழம் ஒன்று 95 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.

வவுனியா தவசிக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இவ்வாறு ஏலம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை வழிபாடுகள் நிறைவடைந்த பின்னர் பழங்கள் மற்றும் பானைகள் என்பன ஏலத்தில் விடப்பட்டன.

இதன்போது மாம்பழம் ஒன்று 95 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனைச் சேர்ந்த தம்பதியினரே இதனை வாங்கிச் சென்றுள்ளனர்.

இவ்வளவு தொகைக்கு மாம்பழம் ஏலம் போனது இதுவே முதல் தடவை என்று ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான ஏலங்கள் மூலம் பெறப்படும் பணம் ஆலய அபிவிருத்திபக்குப் பயன்படுத்தப்படும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# ராம கிருஷ்ண மிஷனின் தண்ணீர் பந்தல் கல்லடியில்



( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல் இன்று (20) ஞாயிற்றுக் கிழமை கல்லடி உப்போடை பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் இடம் பெற்றது.

காலஞ்சென்ற திருமதி சண்முகரட்ணம் ஞாபகார்த்தமாக தண்ணீர் பந்தல் அமைக்கப் பட்டது.

ராமகிருஷ்ண மிஷன் கல்லடி சிறுவர் ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையிலான குழுவினர் இத் தண்ணீர் பந்தலை நடத்தி னர். பெருந்திரளான பக்தர்கள் அதில் பங்கேற்றனர்.

# மலையகப் பாடகி அசானிக்கு தியாகி வீடமைக்க நிதி உதவி





மலையகத்தில் இருந்து தமிழ் நாடு சென்று சீ தமிழ் சரிகமப நிகழ்ச்சி மூலம் உலகம் அறிந்த அசானிக்கு தியாகி அறக்கொடை நிலையத்தின் ஸ்தாபகர் கொடைவள்ளல் வாமதேவன் தியாகேந்திரன் நிரந்தர வீடு ஒன்றைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளார்.

வானொலி மூலம் பாடல் கேட்டு பாடி தேர்ச்சி பெற்ற அசானி தமிழ்நாட்டில் பாடலில் வெற்றி பெற்றால் தான் வீடு பரிசு.

ஆனால் நிரந்தர வீடில்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கிய அசானிக்கு அவரின் திறமைக்கு முதல் பரிசாக நிரந்தர வீட்டை கட்டிக் கொடுக்க தியாகேந்திரன் முன்வந்துள்ளார்.



# மலையகத்துக்குச் சென்றார் இராம கிருஷ்ண மிஷன் சுவாமி

( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மடத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் நேற்று (19) சனிக்கிழமை மலையகத்துக்கு விஜயம் செய்தார்.

அங்கு பண்டாரவளை மற்றும் காலி, யாஎல ஆகிய இடங்களில் ஆசிரியர்களுக்கான ஆன்மீக கருத்தரங்கை நடத்தினார் .

அத்தோடு கொட்டகலவில் மிஷன் பக்தர்களோடு சத்சங்கம் ஒன்றை நடத்தினார்.

மலையகத்தில் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜிக்கு பாரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

# சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையினருக்குச் சீருடை



(நூருல் ஹுதா உமர், யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் சீருடை அறிமுக நிகழ்வு சாய்ந்தமருது ஜன்னா வித்தியாலத்தில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை சாய்ந்தமருது கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.சலீம் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களின் ஒருவரான ஏ.எஸ். அஸ்வரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேரவைக்கான சீருடையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளிர், பேரவையின் மூத்த உலமா அஷ்செய்க் யூ.எல். அஸ்ரப், ஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

சீருடைக்கான அனுசரனையை மரணித்த தாயின் ஞாபகர்த்தமாக பொறியியலாளர் அலியார் சௌஃபர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தி.மு.கவினர் உண்ணாவிரதம்!

## - சென்னையில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு



நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி திமுக இளைஞர், மாணவர், மருத்துவ அணிகள் சார்பில் தமிழகம் முழுவதும் இன்று உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெறும் போராட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் வெளியிட்டப்பட்ட அறிக்கை, தமிழக மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து, அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக உருவெடுத்துள்ள நீட் தேர்வைத் திணிக்கும் மத்திய பா.ஜ.க. அரசு, ஆளுநரை கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும் தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களிலும், புதுச்சேரி, காரைக்காலிலும் இன்று உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெறுகிறது.

இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரைநடைபெறும் உள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாணவ, மாணவிகள், அவர்களின் பெற்றோர், கல்வியாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டு மொத்த தமிழக மக்களின் மன நிலையை பிரதிபலிக்கும் வகையில் தன்னார்வலர்களும் பொதுமக்களும் தங்களின் கருத்துகளை எடுத்துரைக்கவுள்ளனர். இந்த போராட்டத்தின் பணிகளை இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஒருங்கிணைக்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்தில் கட்சியின் இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுள்ளார்.

அத்துடன், தி.மு.க .பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உத்தரபிரதேச முதல்வரை சந்தித்தார் ரஜினிகாந்த்: துணை முதல்வருடன் 'ஜெயிலர்' படம் பார்த்தார்

நடிகர் ரஜினிகாந்தின் 'ஜெயிலர்' திரைப்படம் அதிக பிரபலம் அடைந்து வருகிறது. இந்த மகிழ்ச்சியில், நீண்ட இடைவெளிக்கு பின்னர் ரஜினிகாந்த் தனது நண்பர்களுடன் ஓகஸ்ட் 9 ஆம் திகதி இமயமலைக்கு புறப்பட்டார். இங்கு பத்ரிநாத், பாபா குகை உள்ளிட்ட முக்கிய இடங்களை தரிசித்தார்.

இதையடுத்து அவர் ஜோர்க்கண்ட் மாநிலம் சென்று அங்கு தமிழரான ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்து பேசினார். சின்னமஸ்தா எனும் இடத்திலுள்ள சக்தி பீடமான காளி கோயிலுக்கு சென்று தரிசனம் செய்தார். இதையடுத்து நேற்று முன்தினம் உத்தரபிரதேச தலைநகர் லக்னோவுக்கு சென்றார்.



உத்தரபிரதேசத்தில் ரஜினிகாந்தின் மூன்றுநாள் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. லக்னோ விமான நிலையம் முதல் திரும்பச்செல்லும் வரை அவருக்கு அரசுத் தரப்பு சிறப்பு மரியாதை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. லக்னோவில் தாஜ் நட்சத்திர விடுதியில் ரஜினிகாந்த் நண்பர்களுடன் தங்கியுள்ளார்.

இதேவேளை, ரஜினிகாந்த் மற்றும் அவரது மனைவி லதா ஆகியோர் லக்னோவில் பி.வி.ஆர். திரையரங்கத்தில் உத்தரபிரதேச துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியாவுடன் 'ஜெயிலர்' சிறப்புக் காட்சியை கண்டு மகிழ்ந்துள்ளனர்.

அத்துடன், ரஜினி மற்றும் அவரது மனைவி லதாவை முதல்வர் யோகி ஆதித்யநாத் தனது வீட்டுக்கு அழைத்து கலந்துரையாடியுள்ளார். அப்போது, முதல்வர் யோகியின் காலில் விழுந்து வணங்கிய ரஜினி அவருக்கு பூங்கொத்து வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 5 பேர் பலி!





உக்ரைனுக்கு ரஷ்யாவுக்கும் இடையேயான போர் 542 ஆவது நாளை கடந்து நடைபெற்று வரும் நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோ மீது உக்ரைன் நேற்று முன்தினம் அதிகாலை ட்ரோன் தாக்குதல் நடத்தியிருந்த நிலையில், இந்த ட்ரோனை மாஸ்கோவில் நிறுவப்பட்டுள்ள வான்பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியுள்ளது.

இந்த நிலையில், ட்ரோன் தாக்குதலுக்கு பதிலடியாக உக்ரைன் மீது ரஷ்யா நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைனின் செர்னிகிவ் நகர் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளதுடன், இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 37 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## கனடாவில் தொடரும் காட்டுத்தீ பரவல்!



கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயானது வேகமாக பரவி வருகிறது என தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த மாகாணத்தில் திடீரென 100 இற்கும் மேற்பட்ட இடங்களில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பிரிட்டிஷ் கொலம்பியா முழுதும் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கனடாவின் மேற்கு கெலோனா நகரத்தில் தீ வேகமாக பரவி வருவதால் 2,400 வீடுகளில் வசிக்கும் சுமார் 36 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், எல்லோ-நைஃப் நகரத்தை நோக்கியும் தீ வேகமாக பரவி வருவதால், அங்கு வசிக்கும் மக்கள் விமானங்கள் ஊடாக வெளியேறி வருகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஜேர்மனியின் குடியுரிமை சட்டத்தில் மாற்றம்: விரைவில் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு!



ஜேர்மன் குடியுரிமை தொடர்பில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு இந்த மாதமே ஜேர்மன் நாடாளுமன்றில் நடத்தப்பட உள்ளது என அந்த நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மேலும், ஜேர்மனியின் கோடை விடுமுறைக்குப் பின்னர் பணிக்குத் திரும்பியுள்ள ஜேர்மன் அமைச்சர்கள், ஜேர்மனியின் குடியுரிமைச் சட்டங்களை விரைவாக புதுப்பிக்கும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்டீபன் தோமே, குடியுரிமை சட்டமூலம் மீது, அடுத்த வாரம் அல்லது அதற்கு அடுத்த வாரத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இன்னும் தெளிவாகக் கூறினால், இம்மாதம், மாதம் 23ஆம் திகதி அல்லது 30 ஆம் திகதி குடியுரிமை சட்டமூலம் நிறைவேற்றப்படலாம் என தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் செப்டம்பர் மாதம், சட்டமூலம் மீதான நாடாளுமன்ற வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ட்ரம்ப் தொடர்பான கொலை வழக்கு: குற்றவாளிக்கு சிறை!

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது அவரை கொலை செய்யும் நோக்கில் விஷம் கலந்த கடிதங்களை அனுப்பிய பெண்ணுக்கு 22 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த பெண்ணிற்கு 252 மாதங்கள் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளதோடு தண்டனைக் காலம் முடிந்த பின்னர் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949